(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 1 (6)]**

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2008, செத்தெம்பர் 12, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2008, செத்தெம்பர் 23, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத் தின் கீழான தீர்மானம்,— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீ காரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 37 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின்**

**8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37**

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “இலங்கைப் புகையிரதத் திணைக்கள பண்டகசாலை முற்பணக் கணக்கு” — இலங்கை புகையிரதத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக் கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 1,000,000,000 இலிருந்து ரூபா 680,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை — ரூபா 3,800,000,000 இலிருந்து ரூபா 3,900,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக் கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 550,000,000 வரை.

(இக்கட்டளை 2007.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்

2008.08.28
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும் - அரசியலமைப்பின் கீழான தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்கள் 2008.01.04 ஆம் திகதியிலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டதையடுத்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்குரிய எஸ். எல்.—4 ரூ. 47,515-12x1,425—64,615 சம்பள அளவுத்திட்டத்தின் ரூ. 58,915 சம்பளத்திட்டத்தில் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. திரு. சுவர்ணஜோதி அவர்கள் பதவி வகிக்கும் காலம் வருடாந்த ஏற்றத்தை வழங்குவதற்கும் 2008.08.06 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப் பட்டது. ஆகையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்களுக்கு 2008.01.04 ஆந் திகதியிலிருந்து ரூ. 58,915 மாதாந்த சம்பளத்தை வழங்கவும், பதவிவகிக்கும் காலம் வரை பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றத்தை வழங்கவும் வேண்டுமென இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

*

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*

தேசிய பொதுவழிகள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சர்,— இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பயன்படுத்துதல் அபிவிருத்தி அதிகார சபைச்சட்டத்தின் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பயன்படுத்துதல் அபிவிருத்தி அதிகார சபைச்சட்டத்தின் 37 ஆம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவின் (இ) ஆம் பந்தியின் கீழ் கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2007 சனவரி மாதம் 22 ஆந் திகதிய 1481/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.09.09 ஆந் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சர்,— இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பயன்படுத்துதல் அபிவிருத்தி அதிகார சபைச்சட்டத்தின் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பயன்படுத்துதல் அபிவிருத்தி அதிகார சபைச்சட்டத்தின் 37 ஆம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவின் (இ) ஆம் பந்தியின் கீழ் கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதிய 1536/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.09.09 ஆந் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

தகவல் அத்துடன் தொடர்புத் தொழில்நுட்பவியல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*

தாவர, விலங்கினப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2008, ஒற்றோபர் 10, வெள்ளிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

கௌரவ ரவி கருணாநாயக்க,— சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்தல்,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 06, 2007) "வினைத்திறமை மிக்கதோர் நிர்வாகத்தை மேற்கொள்ளுமுகமாகவும் தமது அமைச்சர்களது செயற்பாடுகளை விமர்சனரீதியாக ஆய்வு செய்வதற்கு ஏதுவான வகையில் சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப் பெற்றது. [ பா.3/ '05]

பா.1 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஆயுதங்களை பதிவு செய்தல்,— இலங்கையிலுள்ள அனைத்து ஆயுதங்களையும் பதிவுசெய்ய வேண்டுமெனவும் அவ்வாறு பதிவு செய்ததின் பின்னரும் யாரிடமாவது அதிகாரமற்ற ஆயுதங்கள் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் குறித்த நபருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக வழக்குத் தொடரப்பட்டு 20 வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.2 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— வங்கி அலுவலக நேரத்தை நீடித்தல்,— நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துமுகமாக வங்கி அலுவலக நேரத்தினை 0900 மணி முதல் 1600 மணிவரை நீடிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.3 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— கோட்டே தேர்தல் தொகுதியில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடிவிடுதல்,— மிக சுதந்திரமாகவே மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவது நாட்டின் ஒழுக்கவிழுமியங்களுக்கு பங்கமேற்படுத்தி வருவதால் கோட்டே தேர்தல் தொகுதியில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடிவிட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.4 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊடகவியலாளர்களுக்கு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE ) அரசாங்கக் கணக்குக்குழு (PAC ) மற்றும் ஆலோசனைக் குழுக்கூட்டங்களில் பிரசன்னமாயிருக்க அனுமதியளித்தல்,— அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE ) அரசாங்கக் கணக்குக்குழு (PAC ) மற்றும் ஆலோசனைக்குழுக் கூட்டங்களில் இதுபோன்ற கலந்துரையாடல்கள் மிக விளை பயனுடையதாகவும் அர்த்தபுஷ்டியுள்ளதாகவும் வெளிப்படையானதுமாக அமைய ஏதுவாக இருக்கும் என்பதால், ஊடகவியலாளர்களுக்கு அதில் பிரசன்னமாயிருக்க அனுமதியளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.5 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவிகளை அளித்தல்,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவியாக அதிகபட்ச கடனாக 2,50,000 ரூபாவை 5% குறைந்த வட்டி வீதத்தில் வழங்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.6 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்குதல்,— நாட்டினுள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் போன்றவற்றின் பாவனை வேகமாக அதிகரித்து வருவதாலும் அவ்வாறான கழிவுப் பொருட்களை பாரதூரமின்றி அகற்றுவதனால் ஏற்படும் பாரியளவு சுற்றாடல் மாசுபடுதல் நிமித்தமும் பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.7 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச வங்கிகளிலிருந்து கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுதல்,— அரச வங்கியிலிருந்து ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுவதற்காக சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.8 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் செயற் படுத்தல்,— பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்படும் தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பயனுள்ள பங்களிப்பொன்றாக அமைவதற்கு ஏதுவாக அவைகள் ஒரு வருடத்துக்குள் விவாதிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டால் ஆறுமாதங்களுக்குள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.9 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைத்தல்,— நாட்டில் தேசிய மனப்பாங்கை ஏற்படுத்துமுகமாக பாராளுமன்ற அமர்வு ஆரம்பமாகும் போதும் ஒத்திவைக்கும் போதும் பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைக்க வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.10 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பலமான இலங்கை அடையாளத்தை ஏற்படுத்துதல்,— அரச ஆவணங்களில் ஒருவரது சாதியையும் சமயத்தையும் வெளிப்படுத்த வேண்டுமென்ற தேவைப்பாடு பலமான தேசிய அடையாளத்தை ஏற்படுத்துவற்கு தடையாகவும் இடர்ப் பாடாகவுமுள்ளதால் இத்தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்று இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.11 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக நோக்கங்களுக்காக சமயத் தலைவர்களின் உருவங்களை பயன்படுத்துவதை தடைசெய்தல்,— சகல சமயங்களும் சமமாக மதிக்கப் படல் வேண்டுமென்பதுடன் புத்தபெருமான், யேசுநாதர், சிவபெருமான், முஹம்மட் நபி (ஸல்) அவர்கள் ஆகியோரின் உருவங்களை வர்த்தக விளம்பரங்களிலோ வேறுவிதமான சமயம்சாராத படிவங்களிலோ பயன்படுத்தலை தடைசெய்தலும் வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.12 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குதல்,— சகலருக்கும் சமமான நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக சனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு பலமான சுதந்திர ஊடகவியலை ஏற்படுத்துவதற்கும் நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறை களை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.13 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கை களுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் மற்றும் நடாத்துதல், மாதாந்த சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.14 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசியல் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பித்தல்,— எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் பெறப்பட்ட வருமானமும் செலவிடப்பட்ட செலவினமும் பற்றிய கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமெனவும் வருடம் தோறும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.15 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.16 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.17 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப் பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்களை ஏற்படுத்துவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக “தரப் பாதுகாப்பு பேரவையொன்றை” சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.18 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— 'விசேட வழக்குத் தொடுநர்' எனப்படும் பதவி யொன்று உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்கு வதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்றிறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்திறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப் படுவதற்கு ''விசேட வழக்குத் தொடுநர்'' எனப்படும் பதவியொன்று உருவாக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.19 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்துதல்,— இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் போன்று, வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலுள்ள எதிரானதும் சார்ப்பற்றதுமான தாக்கல்கள் ஏதும் இருப்பின் அவைகளை நிவர்த்தி செய்வதற்கும் தணிப்பதற்கும் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்தப்பட வேண்டு மென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.20 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— கேகாலை மாவட்டத்தில் நூதனசாலை யொன்றினை தாபித்தல்,— கேகாலை மாவட்டத்தில் உள்ள புராதன, கலாசார, தேசிய விழுமியங்கள் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் தொல்பொருட்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலுமாக நூதனசாலையொன்று தாபித்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.21 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தேசிய கொள்கை நிர்ணயம் தொடர்பில் தேசிய கொள்கையாக்க சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள் மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.22 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலை செய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள் ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டு மென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.23 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— புதிய கண்டுபிடிப்புகளை உலகிற்கு அறிமுகப்படுத்துமுகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப் பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக் கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்துவதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற் காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருது கின்றது.

பா.24 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் உள்நாட்டு கைத் தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.25/ ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— நீதித்துறை, காவல்துறை மற்றும் சிறைச்சாலை ஆகியவற்றை ஒன்றிணைத்து சனாதிபதி ஆணைக்குழுவொன்றினை நியமித்தல்,— சமூகத்தில் வியாபித்துவரும் குற்றச் செயல்களை குறைப்பதற்காகவும், குற்றவியல் சட்டங்களில் உள்ள குறைபாடுகளைக் குறைத்து அதனை மேம்படுத்தியும் காணித் தகராறுகள் உட்பட நீதிமன்றங்களில் குவிந்திருக்கும் விசாரணைகளின் தேக்க நிலையை நீக்குவதற்காகவும் மற்றும் நீதித்துறை, காவல்துறை, சிறைச்சாலை ஆகியவற்றினை நவீன மயப்படுத்தி துரித சேவைகளை வழங்குதனை நோக்கமாகவும் கொண்டு நீதித்துறை, காவல்துறை, சிறைச்சாலை ஆகிவற்றை ஒன்றிணைத்து சனாதிபதி ஆணைக்குழுவொன்றினை நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.26 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.27 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்,— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.28 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை ஒரு வாரகாலத்தினுள் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை மீளப் பெற விண்ணப்பிப்பவர்களுக்கு ஒருவார காலத்தினுள் அவற்றைப் பெற்றுக்கொடுப் பதற்கு உரிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருது கின்றது.

பா.29 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— அரச கூட்டுத்தானங்கள், சபைகள், அதிகார சபை மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களிற்கும் தவிசாளர்களையும் இயக்குநர் சபைகளையும் நியமித்தல்,— அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபை மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களிற்கும் தவிசாளர்களாகவும் இயக்குநர் சபை உறுப்பினர் களாகவும் தொழில்சார் கல்வித் தகைமைகள், அனுபவங்கள் உள்ளவர்களை மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.30 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— கிராம உத்தியோகப் பிரிவுகள், பிரதேச செயலாளர் பிரிவுகள், மாவட்ட நிர்வாக பிரதேசங்களின் எல்லைகளை விஞ்ஞான முறையில் மீள நிர்ணயித்தல்,— நாடு முழுவதும் மீண்டும் நில அளவீடொன்றினை மேற்கொண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள், பிரதேச செயலாளர் பிரிவுகள், மாவட்ட நிர்வாக பிரதேசங்களின் எல்லைகளை விஞ்ஞான முறையில் மீள நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.31/ ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— ஸ்ரீ லங்கா, வெளிநாட்டு சேவைக்கு வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் மட்டுமே ஆட்சேர்த்தல்,— ஸ்ரீ லங்கா, வெளிநாட்டு தூதுவராலய சேவைக்கு ஆட்சேர்க்கும் போது வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் மட்டுமே தீர்மானம் எடுப்பதுடன் அடிப்படைக் கல்வித் தகைமைகளை பரிசீலித்தலே நேர்முகப்பரீட்சையின் போது மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.32 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதல்,— குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதலும் ஒரே நீதிமன்றத்தில் இடம்பெறக்கூடிய வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.33 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்களை வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேருந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.34 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளான வர்களுக்கான நிவாரணம் அளிக்குமுகமாக சனாதிபதி ஆணைக்குழு,— ஆரம்ப காலம் முதல் இன்றுவரை தாம் கொண்ட அரசியல் கொள்கை காரணமாக அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளானவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்து நிவாரணம் வழங்குவதற்காக பூரண பலமுடைய சனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.35 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனாசிரியர்களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.36 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன் றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.37/ ' 08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— ஓய்வுப் பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வுப் பணிக்கொடை பெற்றுக்கொள்ளப்படாத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.38 / ' 08

கௌரவ விஜித ரணவீர,— உஸ்ஸன்கொட மலைத்தொடர் அமைந்துள்ள நிலப்பரப்பைப் பேணிப் பாதுகாத்தல்,— வரலாற்றுக்கு முந்திய யுகத்தில் மத்திய முன்னைய காலகாலத்துக்குரியதென இனங்காணப்பட்டுள்ளதும் தென் மாகாணத்தில் அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளதும் தென்னிலங்கையின் ஹோர்டன் சமவெளியெனப் பிரபல்யமடைந்துள்ளதுமான உஸ்ஸன்கொட மலைத்தொடர் அமைந்துள்ள நிலப்பரப்பு, இலங்கையில் இருபத்தெட்டாயிரம் வருடங்கள் பழமை வாய்ந்த திறந்த வெளிக் குடியேற்றமொன்றின் கேத்திரவடிவ ஆயுதங்களும் பாறைகளும் கண்டுபிடிக்கப்பட்ட நிலப்பகுதியாகவும் கடல் மற்றும் தரை உயிரியல் பல்வகைத்தன்மையில் பெருமளவு வளங்கள் நிறைந்த நிலப்பகுதியாகவும், சிறந்த கடலாமைகளின் வாழ்விடமாகவும், சுனாமிப் பேரலையினால் மக்களைப் பாதுகாத்த மதிலாகவும் அதிக பெறுமதியை கொண்டிருப்பதனால் இந்நிலப்பகுதியில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களை நிறுத்தி விட்டு உடனடியாகப் பேணிப் பாதுகாக்க வேண்டிய சுற்றாடல் தொகுதியொன்றாக பிரகடனப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.39 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.40 / ' 08

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரஜைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

பா.41/ '08

கௌரவ விஜித ரணவீர,— 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துதல்,— இலங்கையில் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் காணி உரிமை பலவித உரிமங்களின் கீழ் வருவதுடன் மேற்படி சட்டத்தினால் வாரப் பயிர்ச்செய்கை முறை ஒழிக்கப்பட்டதனால் தாங்கள் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள காணிகளையும் இழக்க நேர்ந்துள்ளதனாலும் சட்டத்தினால் பாதுகாப்பு இல்லாததால் பலவித காணித்தகராறுகள் ஏற்படுகின்றதனாலும் வாரப்பயிர்ச் செய்கையாளர்களுக்கு ஏற்பட்ட அநீதியை ஒழிப்பதற்காக 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமத்தொழில் அபிவிருத்தி சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

---

## 2008, ஒற்றோபர் 21, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0546/ '08

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தேசிய நூதன சாலைகள் திணைக்களத்தில் காட்சிக்கூட பொறுப்பாளர் பதவிக்கு அரசாங்க அலுவலக ஊழியர் சேவையின் Iஆம் தர பதவியில் 09/2004 இலக்க பொது நிர்வாக சுற்று நிருபத்தின் கீழ் ரீ. பீ. ஐ. 4 சம்பள அளவுத் திட்டத்தின் பிரகாரம் சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) புதிய சம்பளத் திருத்தத்தின் கீழ் பி. எல். ஐ. 2006 சம்பள அளவுத் திட்டத்தில் 22 வது படிநிலையில் வைத்து இவ்விரு பிரிவுக்கும் சம்பளம் செலுத்தப் பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தேசிய நூதன சாலைகள் திணைக்களத்தின் காட்சிக்கூட பொறுப்பா ளர்களுக்கு பி. எல். ஐ. 2006 சம்பள அளவுத்திட்டத்தின் 22வது படிநிலையில் வைத்து 10 மாதங்கள் சம்பளம் செலுத்திய பின்னர் அவ்வாறு செலுத்தும்படி அரும்பொருட்காட்சியக பணிப்பாளர் பரிந்துரை செய்திருநதும்கூட சம்பளம் மற்றும் ஊழியர் எண்ணிக்கை ஆணைக்குழுவின் பரிந்துரையின் மீது 6/2001 சுற்றுநிருபத்தின் பி. எல். ஐ. 2006 சம்பள அளவுத்திட்டத்தின் 18வது படிநிலை வரை அச்சம்பளம் குறைக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) இவ்வாறு நூதன சாலைகள் திணைக்களத்தின் காட்சிக்கூட பொறுப்பாளர் களின் சம்பளத்தைக் குறைத்ததன் காரணமாக 6/2006 சம்பள சுற்று நிருபத்தை வெளிப்படுத்துவதற்கு முன்னர் அவர்கள் பெற்றுக் கொண்டிருந்த சம்பளத்தைவிட ரூ. 450/= குறைவாக சம்பளம் பெறுகின்றனர் என்பதையும்,

(iii) இந்த நூதன சாலைகள் காட்சிக்கூட பொறுப்பாளர்கள் தமக்கு நிகழ்ந்த அநீதியை மினத உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எம். ஆர். சி. 16747/06/எல்-13 ஆம் இலக்கத்தின் கீழ் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து அரசியலமைப்பின் 12(1)வது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப் படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதென ஆணைக்குழு 2007.11.21 ஆம் திகதி தீர்மானித்துள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) தேசிய நூதன சாலைகள் திணைக்களத்தின் காட்சிக்கூட பொறுப் பாளர்களுக்கு நிகழ்ந்துள்ள இந்த சம்பள முரண்பாட்டைத் திருத்த அவர் உரிய நடவடிக்கை எடுப்பாரா?

(ii) ஆமெனில், எப்பொழுது முதல்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2008, ஒற்றோபர் 22, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0505/ '08

கௌரவ (திருமதி) சுஜாதா அழககோன்,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முகாமை செய்வதற்குப் பொறுப் பேற்கப்பட்டுள்ள சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எத்தனை,

(ii) உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமாக இருந்து, பின்பு நகர அபிவிருத்தி அமைச்சின் முகாமைத்துவத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை யாது,

(iii) அவற்றின் பெயர்கள் மற்றும் இவ்வாறு முகாமைத்துவத்தைப் பொறுப்பேற்ற திகதி ஆகியவை யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உள்ளூராட்சி நிறுவனங்களின் உரிமைக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வாடகையாகப் பெறப்பட்ட தொகையில் எத்தனை வீதம் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றது,

(ii) உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகளை பொறுப்பேற்ற திகதி தொடக்கம் 2007.12.31 ஆம் திகதி வரை இந்த சுற்றுலா விடுதிகளுக்காக உரிய வீதத்தொகை வழங்கப்பட்டுள்ளதா,

(iii) அவ்வாறின்றேல், இந்த வீதத்தொகை வழங்கப்படவுள்ள சுற்றுலா விடுதிகள் மற்றும் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ஆகியவை வெவ்வேறாக யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0506/ '08

கௌரவ (திருமதி) சுஜாதா அழககோன்,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மாத்தளை மாநகர சபைக்குச் சொந்தமான சுற்றுலா விடுதிக்கென மாதாந்தம் வழங்கப்படும் தவணைத் தொகை எவ்வளவு,

(ii) இச்சுற்றுலா விடுதியில் பணிபுரியும் பணியாளர்கள் எத்தனைபேர்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாத்தளை சுற்றுலா விடுதி 2007.09.05 ஆம் திகதி முத்திரையிடப்பட்டது என்பதையும்,

(ii) இச்சுற்றுலா விடுதி 2008 மார்ச் மாதம் வரை வாடகைக்குக் கொடுக்க முடியா திருந்தது என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) குறிப்பிட்ட காலத்தில் தொழிலை இழந்தவர்கள் தொடர்பாக அவசிய மான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா,

(ii) இக்காலத்தில் மாத்தளை மாநகரசபைக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டியது நகர அபிவிருத்தி சபையாயின் இந் நட்டத்தை ஈடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மாத்தளை சுற்றுலா விடுதிக்கு கேள்விப்பத்திரம் கோரப்பட்ட பொழுது கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாது,

(ii) இவ்விண்ணப்பதாரர்கள் மற்றும் அவர்களின் நிதி ஆற்றல்கள் வெவ்வேறாக யாவை,

(iii) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரரின் நிதி ஆற்றல் மற்றும் தொழிற்று றைத் தகைமை யாது

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

---

## 2008, ஒற்றோபர் 23, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0507/ '08

கௌரவ (திருமதி) சுஜாதா அழககோன்,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) சீகிரிய தொல்பொருளியல் அபிவிருத்தி நடவடிக்கைகள் (உலக மரபுரிமை நகரம்) தொடர்பான உத்தேச கருத்திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது,

(ii) அதன் முதல் கட்டம் எப்போது முடிவுற்றது,

(iii) அந்தக் கட்டத்தில் முடிவுறுத்தப்பட்ட விடயங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இரண்டாம் கட்டத்துக்கான காணிகளை சுவீகரிப்பதற்கு வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் எத்தனை,

(ii) அது எந்தெந்த ஆண்டுகளில்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) காணிகளிலிருந்து வெளியேறுமாறு எவ்வாண்டில் அறிவிக்கப்பட்டது,

(ii) எனினும் இதுவரை நட்டஈடோ மாற்றுக்காணியோ வழங்கப்படாது 1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க காணி சுவீகரித்தல் (திருத்தம்) சட்டத்தின் 39 (அ) வாசகத்தின் பிரகாரம் இக்காணிகள் அரசினால் மீளளிக்கப்படுமா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0538/'08

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் தொடக்கம் கொழும்பு தர்ஸ்டன் வித்தியாலயத்தின் அதிபர் பதவி வெற்றிடமாகி உள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவ்வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர், அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவிக்கு பதவி உயர்த்தப்பட்டாரா,

(ii) இதற்காக அவர் தேவையான தகைமைகளைக் கொண்டிருந்தாரா,

(iii) அவ்வாறாயின் அவை யாவை,

(iv) அதிபர் பதவியில் பதில் கடமையாற்றிய பிரதி அதிபர் ஓய்வில் சென்றிருப்பின், அது எப்போது,

(v) தற்போது அதிபர் பதவி வகிப்பது யார்,

(vi) நிரந்தர அதிபர் ஒருவரை நியமிக்க தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா,

(vii) அவ்வாறாயின், அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0649/ '08

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) குருநாகல் நகருக்கு அண்மையில் அமைந்துள்ள படகமுவ ஒதுக்குப் பிரதேசத்தின் பரப்பளவையும் அதன் சுற்றாடல் ரீதியிலான முக்கியத்துவத்தையும் அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சுற்றாடல் ரீதியிலும் அமைவிடம் ரீதியிலும் மேற்படி வனப்பகுதி முக்கியத்துவம் வாய்ந்ததென்பதையும்,

(ii) சிலர், மேற்படி ஒதுக்குப் பிரதேசத்தின் புதர்ச்செடிகளுக்கும் வன விலங்குகளின் சுதந்திரத்திற்கும் மற்றும் இயற்கைத் தன்மைக்கும் குந்தகம் விளைவிக்கும் வகையில் செயற்படுகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) தற்போது, மேற்படி வனப்பகுதிக்குள் பாதைகள், பாலங்கள், மரங்களின் மீது அமையக்கூடிய குடில்கள், கிணறுகள், மலசல கூடங்கள் மற்றும் வேறு பல கட்டிடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என்பதையும்,

(ii) இதன்காரணமாக ஒதுக்குப்பிரதேசத்தின் தனித்துவத்திற்கு குந்தகம் விளைவிக்கப்படுகின்றது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) மேற்படி கருத்திட்டம் எந்நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும்,

(ii) இக்கருத்திட்டத்தின் தன்மையும் நோக்கமும் யாதென்பதையும்,

(iii) இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பாராளுமன்ற ஆலோசனைக் குழுவிற்கும் குருநாகல் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

## 2008, நவெம்பர் 04, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0097/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2007 ஆம் ஆண்டு நவம்பரில் மேதகு சனாதிபதி ஈரானுக்கு மேற்கொண்ட பயணத்திற்கான மொத்தச் செலவையும்,

(ii) உடன் சென்றவர்களின் எண்ணிக்கையையும்,

(iii) அதனால் நாடு பெற்றுக்கொண்ட நன்மைகளையும்,

(iv) அவை என்னவென்பதையும் மற்றும் அவற்றின் அளவையும்,

(v) இதுவரை பெற்றுக்கொள்ளப்பட்ட அளவையும்,

(vi) இன்னும் பெற்றுக்கொள்ளப்படவிருக்கின்ற எண்ணிக்கையை அதன் திகதி வாரியாகவும்,

(vii) அவ்வுதவிகள் எத்துறைகள் சார்ந்தவை என்பதையும்

அவர் இச் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இதற்குப் பதிலாக, ஈரானுக்கு நாம் என்ன வழங்கினோம் என்பதையும் அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0098/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) "அபி வெனுவென் அபி" நிதியம் சட்டவாக்கம் செய்யப்பட்ட திகதியையும்,

(ii) அது சட்டவாக்கம் செய்யப்பட்ட திகதியிலிருந்து இற்றைவரை சேகரிக்கப் பட்ட பணத்தின் அளவையும்,

(iii) ரூபா 100,000 இற்கு மேல் நன்கொடை வழங்கிய ஆட்களின் பெயர்களையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) சேகரிக்கப்பட்ட பணம் எதற்காகப் பயன்படுத்தப்பட்டது என்பதையும்,

(ii) படை ஆளணியினருக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யையும்,

(iii) எதிர்காலத் திட்டங்களையும் எதனை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0099/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மிஹின் எயார் ஆரம்பித்ததிலிருந்து இன்றுவரை குத்தகைக்குப் பெறப்பட்ட, கொள்வனவு செய்யப்பட்ட அல்லது வாடகைக்குப் பெறப்பட்ட விமானங்களின் எண்ணிக்கையையும்,

(ii) செலுத்தப்படும் அல்லது செலுத்தப்பட்ட தொகையை மாதாந்த அடிப்படையிலும்,

(iii) நட்டம் ஏற்படாமல் செலவை ஈடுசெய்வதற்குத் தேவையான அதிகுறைந்த சரக்குகள் மற்றும் ஆட்களின் எண்ணிக்கையையும்,

(iv) விமான சேவையின் ஆரம்பத்திலிருந்து செலவை ஈடு செய்வதற்கு கொண்டு செல்லப்பட்ட சரக்குகள் மற்றும் ஆட்களின் எண்ணிக்கையையும் மாதாந்த அடிப்படையிலும்,

(v) சரக்கு ஏற்றிச் செல்வதற்கான மொத்த இயலளவு, இற்றைவரை கொண்டு செல்லப்பட்ட மொத்த சரக்கின் கொள்ளளவு, மற்றும் ஆட்களின் எண்ணிக்கை ஆகியவற்றை மாதாந்த அடிப்படையிலும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) எரிபொருள், விமான சேவைகள், அலுவலக இடவசதி மற்றும் களஞ்சிய இடவசதி, வரிகள், விமான நிலுவைகள், வங்கிக் கடன்கள் மற்றும் ஏனைய முக்கியத்துவம் வாய்ந்த கடப்பாடுகள் ஆகியவற்றின் மொத்த நிலுவையை இன்றுள்ளவாறாக கால அளவுடனும்,

(ii) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மொத்தப் பணியாளர்களையும் எல்லா பணியாளர்களுக்கும் சம்பளத்துக்குப் புறம்பாக வழங்கப்படும் உரிமைகள் அடங்கலாக மாதமொன்றுக்குச் செலுத்தப்படும் மொத்தக் கொடுப்பனவு களையும் மாதாந்தம் ரூபா. 200,000/- இற்கு சம்பளத்தைப் பெறும் எல்லா பணியாளர்களின் விபரங்களையும்,

(iii) உடன்படிக்கையில் உள்ளடக்கப் பட்டிருப்பினும் கூட விமானப் பணியாளர்கள் குழு பராமரிப்புக் காப்புறுதிக்காக (ACMI) அவர்கள் செலுத்தும் மேலதிகச் செலவையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0170/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2006 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க பந்தய விதிப்பனவு சூதாட்ட (திருத்தம்) சட்டத்தின் கீழ் நேரடியான தொலைக்காட்சி ஒலிபரப்பு வசதிகளை உபயோகித்து நடாத்தப்படுகின்ற பந்தயம் பிடிக்கும் தொழில் முயற்சிகள் இருக்கின்றதென்பதையும்,

(ii) இவ் ஒவ்வொரு நிறுவனம் தொடர்பாகவும் மூன்று இலட்சம் ரூபா வரி செலுத்த வேண்டுமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பந்தயம் பிடிக்கும் வர்த்தக நிலையங்களாக நேரடியான ஒலிபரப்பு வசதிகளை உபயோகிக்கும் நிறுவனங்களின் பெயர்கள் யாவை,

(ii) இந்நிறுவனங்களில் வரி செலுத்தும் கிளைகள் எத்தனை

என்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அந்த நிறுவனத்தின் கீழ் உள்ள பெரும்பாலான கிளைகள் வரி செலுத்தவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) இதன் பிரகாரம் இந்நிறுவனங்களின் கீழ் வரி செலுத்தாத இடங்கள் எத்தனை,

(ii) அரசு இழந்துள்ள வருடாந்த வரித்தொகை எவ்வளவு,

(iii) வரி செலுத்தத் தவறுகின்ற இடங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0171/'08

கௌரவ, லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— மத அலுவல்கள், ஒழுக்க மேம்பாடுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம், தெஹிவலை, அத்திடிய பாலத்திற்கு அண்மையில் அமைந்துள்ள காணியொன்றை பொது நம்பிக்கை பொறுப்பாளர் நிதியத்திற்கு வழங்கியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், இக்காணியின் பரப்பளவு எவ்வளவு என்பதையும்,

(ii) இது எப்போது வழங்கப்பட்டதென்பதையும்,

(iii) பொது நம்பிக்கை பொறுப்பாளர் நிதியத்தினால் மேற்படி காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு ஏதேனும் கொடுப்பனவு செய்யப் பட்டதா என்பதையும்,

(iv) ஆமெனில், எந்த விலையின் அடிப்படையில் வழங்கப்பட்டதென்பதையும்,

(v) காணி வழங்கப்பட்ட நிபந்தனைக்கமைய எவ்வாறான விடயங்களுக்கு இக்காணியை பயன்படுத்த முடியுமென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி காணி தற்போது தனியார் கம்பனியொன்றுக்கு விற்கப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) ஆமெனில், மேற்படிக் காணி என்ன விலைக்குவிற்கப்பட்டது என்பதையும்,

(ii) எந்த நிறுவனத்திற்கு என்பதையும்,

(iii) விற்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(iv) விற்பதற்கு அனுமதி வழங்கியது யாரென்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0216/ '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— கிராமியக் கைத்தொழில், சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிராமியக் கைத்தொழில், சுயதொழில் ஊக்குவிப்பு (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங் கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0591/ '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசு பதவியேற்பதற்கு முன்னர் மன்னார் மாவட்டத்தில் இருந்த வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக் கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) அதன்படி தற்போதைய அரசு அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட வெளிநாட்டு மதுபான நிலையங்கள், விடுமுறை விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பவற்றின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றை அவர் வெவ்வேறாக இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0218/ '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கடற்றொழில், நீரகவளமூலங்கள் (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0410/ '08

கௌரவ அச்சல ஜாகொடகே,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபையின் வலவை – எம்பிலிபிட்டிய எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் இலங்கை மகாவலி அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்டபோது 1981.01.01 ஆம் திகதியன்று ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமா யிருந்த அனைத்துச் சொத்துக்களும் யாவை,

(ii) இவற்றில் பொறுப்பேற்கப்பட்டதும், பொறுப்பேற்கப் படாததுமான அசையாச் சொத்துக்கள் மற்றும் வாகனங்கள் உள்ளடங்கிய சொத்துக்கள் யாவை,

(iii) இவற்றில் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபையின் வீடுகள் / காணிகளின் எண்ணிக்கை யாது,

(iv) ஒப்படைக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் அவை ஒப்படைக்கப்பட்ட அடிப்படை யாது,

(v) ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களில் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபையின் வீடுகள்/காணிகளின் எண்ணிக்கை யாது,

(vi) ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபையிலிருந்த எத்தனை ஊழியர் களுக்கு இவ்வாறு ஒப்படைக்கப்பட்டது,

(vii) ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபையில் தற்போது எஞ்சியுள்ள வீடுகள் / காணிகளின் எண்ணிக்கை யாது,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 1982.01.01ஆம் திகதியிலிருந்து 2007.12.31ஆம் திகதி வரையிலான காலத்தினுள் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபைக்கு சொந்தமாயிருந்த (இன்றைய இலங்கை மகாவலி அதிகார சபை (வலவை)) வீடுகள் / காணிகள் மற்றும் வாகனங் களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0547/ '08

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) குருநாகல் ஆதார வைத்தியசாலையில் தற்போதுள்ள பெண்நோயியல், மகப்பேற்று சிகிச்சை நிபுணர்கள், விசேட பொது வைத்திய நிபுணர்கள் மற்றும் இருதய சிகிச்சை நிபுணர்கள் ஆகியோரின் எண்ணிக்கை யாதென் பதையும்,

(ii) ஆதார வைத்தியசாலையொன்றில் ஒவ்வொரு துறைக்கும் இருக்க வேண்டிய விசேட வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) குருநாகல் வைத்தியசாலையில் மூன்று விசேட வைத்திய நிபுணர்களுக்கான வெற்றிடம் நிலவுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) குருநாகல் வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவிற்கு விசேட பொது வைத்திய நிபுணர் ஒருவரை நியமிப்பதன் மூலம் நோயாளிகள் வைத்திய சாலையில் தங்கி சிகிச்சைப் பெறுவதற்கு பதிலாக சிகிச்சையைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(உ) (i) அநுராதபுரம், பொலன்னறுவை, புத்தளம், மாத்தளை, கேகாலை போன்ற பல மாவட்டங்களைச் சேர்ந்த பெருமளவு நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கும் மேற்படி வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சு கொண்டுள்ள திட்டம் யாதென்பதையும்,

(ii) குருநாகல் வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்கு 2001-2004 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த அரசாங்கத்தினால் வகுக்கப்பட்ட திட்டத்தை அமுல் படுத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0651/ '08

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) குருநாகல் மற்றும் மாத்தளை மாவட்ட எல்லையில் இரு பக்கத்திலும் அமைந்துள்ள ஹல்மில்ல தெமட ஒதுக்குப் பிரதேசத்திலுள்ள விசேடத்துவம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சுற்றாடல் மற்றும் அமைவிடத்தின்படி இவ்வொதுக்குப் பிரதேசம் மிக முக்கியமான தென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) 1973.10.26 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 431A ஹொம்பாவ கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள 153/ 154/ 155/ 156 ஆம் இலக்க காணித்துண்டுகளை சொந்தமாக்கிக் கொள்ளும் நோக்கில் பீ. டீ. காந்தி மீகொட என்பவர் பெறுமதி வாய்ந்த மரங்களை விற்று காட்டை அழிக்கின்றார் என்பதையும்,

(ii) இக்காரணத்தினால் அதிக பள்ளத்தாக்கான இடங்களில் மண்ணரிப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும்,

(iii) தீ வைத்தல் காரணமாக தாவரங்கள் மற்றும் உயிரினங்களின் நிலவுகைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும்,

(iv) ஒதுக்குப் பிரதேசத்தின் நீர் ஊற்றுக்களிலிருந்து அளவுக்கதிகமாக நீரைப் பெற்றுக்கொள்வதினால் சுற்றாடல் வரட்சி மற்றும் தும்மிய, இமிஹா மின்னேகம ஆகிய கிராமங்களுக்கு காட்டு யானைகளின் அச்சுறுத்தல் ஆகியவை ஏற்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0565/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ஒரு லீற்றர் பெற்றோலை இறக்குமதி செய்கின்ற போது அரசாங்கம் அறவிடுகின்ற இறக்குமதி சுங்கத் தீர்வை எவ்வளவு,

(ii) பெற்றோல் லீற்றர் ஒன்றை நுகர்வோருக்கு வழங்குகின்ற போது அரசாங்கம் மேற்படி இறக்குமதி சுங்கத் தீர்வையுடன் அறவிடுகின்ற மொத்த வரி எவ்வளவு,

(iii) பெற்றோல் லீற்றர் ஒன்றுக்கு அரசாங்கம் அறவிடுகின்ற வரி, நுகர்வோரிடம் அறுவிடுகின்ற ஒரு லீற்றர் விலையின் பிரகாரம் என்ன வீதம்

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) நுகர்வோர் கொள்வனவு செய்கின்ற பண்டங்கள் சேவைகளின் விலை அதிகரிப்புடன் பெற்றோல் விலை அதிகரிப்புக்கு தொடர்புண்டு என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) பெற்றோல் ஒரு லீற்றருக்கு அரசாங்கம் அறவிடுகின்ற வரியைக் குறைத்தால் பண்டங்கள் சேவைகளின் விலையைக் குறைக்க முடியும் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0683/ '08

கௌரவ சமன்சிறி ஹேரத்,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறை முகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 வரையிலான காலப்பகுதியில் மாதம்ப பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிறு நீர்ப்பாசன மற்றும் பெரிய நீர்ப்பாசன குளங்கள் எத்தனை மறுசீரமைக்கப்பட்டுள்ளன என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு குளத்திலும் மறுசீரமைக்கப்பட்ட இடம் மற்றும் இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை வெவ்வேறாக யாவை,

(ii) உரிய ஒப்பந்த நடவடிக்கைகளைச் செய்த நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பெயர் முகவரி ஆகியவை யாவை,

(iii) இதுவரை பயிர்ச்செய்கை செய்வதற்கு நீரைப் பெற முடியாது கைவிடப்பட்ட குளங்கள் எத்தனை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இக்குளங்களை மீண்டும் உரிய நிலைக்கு மாற்றுவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0684/ '08

கௌரவ சமன்சிறி ஹேரத்,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறை முகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 வரையிலான காலப்பகுதியில் சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிறு நீர்ப்பாசன மற்றும் பெரிய நீர்ப்பாசன குளங்கள் எத்தனை மறுசீரமைக்கப்பட்டுள்ளன என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு குளத்திலும் மறுசீரமைக்கப்பட்ட இடம் மற்றும் இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை வெவ்வேறாக யாவை,

(ii) உரிய ஒப்பந்த நடவடிக்கைகளைச் செய்த நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பெயர் முகவரி ஆகியவை யாவை,

(iii) இதுவரை பயிர்ச்செய்கை செய்வதற்கு நீரைப் பெற முடியாது கைவிடப்பட்ட குளங்கள் எத்தனை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இக்குளங்களை மீண்டும் உரிய நிலைக்கு மாற்றுவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0685/ '08

கௌரவ சமன்சிறி ஹேரத்,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறை முகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 வரையிலான காலப்பகுதியில் பல்லம பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிறு நீர்ப்பாசன மற்றும் பெரிய நீர்ப்பாசன குளங்கள் எத்தனை மறுசீரமைக்கப்பட்டுள்ளன என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு குளத்திலும் மறுசீரமைக்கப்பட்ட இடம் மற்றும் இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை வெவ்வேறாக யாவை,

(ii) உரிய ஒப்பந்த நடவடிக்கைகளைச் செய்த நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பெயர் முகவரி ஆகியவை யாவை,

(iii) இதுவரை பயிர்ச்செய்கை செய்வதற்கு நீரைப் பெற முடியாது கைவிடப்பட்ட குளங்கள் எத்தனை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இக்குளங்களை மீண்டும் உரிய நிலைக்கு மாற்றுவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?